# வாழி திருநாமம்

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!
உன் சேவடி செவ்விதிருக் காப்பு

*அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹத பராக்ரம,
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்.

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா,
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா லோகஹிதைஷிணீ.

ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய,
ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய.

நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே,
ப்ரஸாதலப்தபரமப்ராப்ய கைங்கர்யசாலிநே.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழு மணவாள மமுனிவன் – வாழியவன்
மாறன் திருவாமி மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படி யுரைக்கும் சீர்.

செய்ய தாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத் தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யில்லாத மணவாள மாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன் தண்டமிழ்நூல்வாழ – கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

**ஆண்டாள் தனித் தொங்கல்**

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர் – நீதியாய்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்.

பாதங்கள் தீர்க்கும் ப்ரமனடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

Back